**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.</u>**

**<u>நாள். 25.08.2025</u>**

**<u>O.S. 34/2023</u>**

**<u>வா.சா. 1</u> – ரெத்தினசிகாமணி**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

வா.சா.ஆ.7 டிரெஸ்டு ஆவணம் எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் 1981 ல். எனக்கு 1981 ல் என்ன வயது இருக்கும் என்றால் 20 வயது. வா.சா.ஆ.7 உருவாக்குவதற்கு ஏற்பட்ட டிரெஸ்டு கூட்டத்தில் நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி கூட்டத்தில் எத்தனை பேர் கலந்து கொண்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.7 ல் 73 வதாக இருக்கும் கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.7 ல் 73 வதாக நான் தற்போது தான் கையொப்பம் இட்டேன் ஆகையால் வா.சா.ஆ.7 என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளவும் இல்லை 1981 ல் உருவாக்கப்பட்டதாக 73 வதாக மேற்படி ஆவணத்தில் கையொப்பம் செய்யவும் இல்லை என்றால் சரியல்ல. எனது ஊரில் தங்கையா நாடார் மகன் கண்ணன் என்ற ஒரு கொத்தனார் உண்டு என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நீலநிற சட்டை அணிந்த நபர்தான் கண்ணன் என்றால் சரிதான். **மேற்படி புகைப்படம் பி.வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பி.வா.சா.ஆ.6 ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதி 06.02.2023 அதிகாலை 02.27 மணிக்கு எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் சரிதான். நான் 06.02.2023 அதிகாலை 02.27 மணிக்கு பிரதிவாதியின் சொத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அத்துமீறி நுழைந்து

சிலையை வைக்கும் போது வைத்த புகைப்படம் என்றால் சரியல்ல வருஷாபிஷேகத்திற்காக சுத்தப்படுத்த சென்றோம். பி.வா.சா.ஆ.6 ல் உள்ளது ஆஞ்சநேயர் சிலை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ல் உள்ள ஆஞ்சநேயர் சிலைக்கு மேல் ஷெட் எதுவும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 06.02.2023 அதிகாலை 02.30 மணிக்கு எடுக்கப்பட்ட புகைப்படத்திலும் ஆஞ்சநேயர் சிலைக்கு மேல் ஷெட் எதுவும் இல்லை என்றால் சரிதான். **மேற்படி புகைப்படம் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் 06.02.2023 அதிகாலை 04.30 மணிக்கு எடுக்கப்பட்ட புகைப்படத்தில் ஆஞ்சநேயர் சிலைக்கு மேல் ஷெட் உள்ளது என்றால் சரிதான். **மேற்படி புகைப்படம் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஐயாவழி அருள் நூலில் "அவரவர் தேடிய முதலை அவரவர் வைத்து அனுபவிக்க வேண்டும் வேறு ஒருவர் சொத்திற்கு ஆசைப்படக்கூடாது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ராம நாடாச்சி, நேசமணி பாண்டிய நாடாச்சி, நாடாச்சி தங்கம் ஆகியோர்கள் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 8 ன் படி ராமநாடாச்சிக்கு எவ்வித சொத்தும் இல்லை என்றால் சரிதான். மொத்த சொத்தில் 51 சென்டில் தெற்கு பகத்தில் 24½ சென்டில் நேசபாண்டிய நாடாச்சிக்கு ஒதுக்கப்பட்ட கிழக்கு பக்கம் உள்ள 12¼ சென்ட் சொத்தை விலைக்கு கொடுக்க வேண்டும் என்றால் ராமநாடாச்சியின் அனுமதி தேவையில்லை என்றால் சரிதான். 1981 ல் நடந்த விபரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1 ம் வாதி கோவிலுக்கு அதிகாரிகள் யாரும் கிடையாது என்றால் சரிதான். ஆகையால் கோவில் சம்மந்தமாக சொத்து ஏதும் வாங்கவோ விற்கவோ அதிகாரிகள் யாரிடமும் அனுமதி கேட்கவேண்டிய அவசியம்

இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் கோவில் அதிகாரிகளை சொத்தினை விற்பனை செய்ய அணுகினார்கள் என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

1981ம் ஆண்டு யாரெல்லாம் கோவில் நிர்வாகிகளாக இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. 1981ல் இருந்த நிர்வாகிகள் எத்தனை ஆண்டு தொடர்ச்சியாக பதவியில் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 யார் தயார்செய்தார்கள் எங்கு வைத்து தயாரித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் இருக்கும் கையெழுத்து ஜெல்பென்னால் எழுதப்பட் டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.3 ல் இருக்கும் ரெவன்யூ ஸ்டாம்பு தற்போதைய புழக்கத்தில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 கோவில் பெயருக்கு எழுதப்பட்டது என்ற விபரம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் உள்ளே எழுதப்பட்ட கையெழுத்து மேலிருந்து கீழ் வரை ஒரே கையெழுத்து தான் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

என் கையில் மினிட்ஸ் புக் அனைத்தையும் தந்தார்கள் என்றால் சரிதான். எந்த வருடத்தில் இருந்து மினிட் புக் தந்தார்கள் என்றால் என்னுடைய முந்தைய பொறுப்பாளர்கால் பராமரிக்கப்பட்ட மினிட்புக்கை தந்தார்கள். என்னிடம் ஒப்படைக்கப்பட்ட மினிட்புக் எதிலும் மேற்படி வா.சா.ஆ.3 மற்றும் அதற்கு செலவு செய்யப்பட்ட விபரம் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் ஒப்படைக்கப்படாத பழைய பொருளாளர்களால் பீரோவில் வைக்கப்பட்ட ஆவணங்களிலும் வா.சா.ஆ.3 குறித்து எவ்வித ஆவணமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 குறித்து நேசபாண்டிய நாடாச்சிக்கு எதிராகவோ பிரதிவாதிகளுக்கு எதிராகவோ சொத்து சம்மந்தமாக ஏதேனும் நடவடிக்கை

எடுத்தார்களா என்றால் இல்லை. எனக்கு வா.சா.ஆ.3 எந்த தேதியில் கிடைத்தது என்றால் நியாபகம் இல்லை. எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு கிடைத்தது என்றால் இரண்டரை வருடங்களுக்கு முன்பு என் கையில் இருந்து கிடைத்தது. எங்கிருந்து கிடைத்தது என்றால் கோவில் ஆவணங்கள் பராமரிக்கப்படும் பீரோவில் இருந்து கிடைத்தது. இந்த ஆவணம் கிடைத்தவுடன் முன்னால்இருந்த பொறுப்பாளர்களிடம் வா.சா.ஆ.3 ஐ பொறுத்து ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. வா.சா.ஆ.3 குறித்து எனக்கு நேரடியாக எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 வழக்கிற்காக என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.3 ன் படி எனக்கு சொத்தை எழுதிதரும் படி நேசபாண்டிய நாடாச்சியின் வாரிசுகளை கேட்டு சட்டப்படி நடவடிக்கை எடுத்தேனா என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை. வரவு செலவு கணக்கு நோட்டு 1ம் வாதி கோவிலுக்கு பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். எனக்கு முன்னால் இருந்த நிர்வாகிகளும் வரவு செலவு கணக்கு நோட்டு 1ம் வாதி கோவிலுக்கு பராமரிக்கப்பட்டு வந்தார்கள் என்றால் சரிதான். 1980 ல் இருந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் குறிப்பிடப்பட்டுள்ள 6 ஆயிரம் ரூபாய்க்கான கணக்கு விபரம் நாங்கள் பராமரிக்கப்பட்டு வந்த கணக்கு நோட்டில் இருக்கிறதா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 உருவாக்கப்பட்டபோது 1974ம் ஆண்டு பாகபத்திரத்தின் நகலை தந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் மேற்படி நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. ஆகையால் பிரமாண வாக்குமூலத்தில் வா.சா.ஆ.3 உருவாக்கப்பட்டபோது 1974ம் ஆண்டு பாகபத்திரத்தின் நகலை தந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் அது அனுமானத்தின் பேரில்.

என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள காம்பவுண்டு சுவர் என்னால் கட்டப்பட்டது என்றால் சரிதான். **மேற்படி புகைப்படங்கள் பி.வா.சா.ஆ.9 மற்றும் 10 என்று குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் மேற்படி கட்டப்பட்ட காம்பவுண்டு சுவருக்கு மேற்கு பக்கம் கிடக்கக்கூடிய காலி இடம் என்றால் சரிதான். **மேற்படி புகைப்படம் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் மேற்படி கட்டப்பட்ட காம்பவுண்டு சுவருக்கு மேற்கு பக்கம் கிடக்கக்கூடிய மற்றொரு காலி இடம் என்றால் சரிதான். **மேற்படி புகைப்படம் பி.வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பி.வா.சா.ஆ.11 ல் கல் அமைத்து முள்கம்பி கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தெற்கு பக்க 24 ½ சென்ட்டில் உள்ள கிழக்கு பக்க 12 ¼ சென்ட்டில் நேசபாண்டிய நாடாச்சிக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் நான்கு தென்னைமரங்கள் உள்ளது என்றால் சரிதான். வேறு மரங்கள் இருக்கிறது என்றால் சரிதான் வாராச்சிமரம் ஒன்று பூவரசம் மரம் ஒன்று இரண்டு பனைமரம் உள்ளது. மேலும் அப்பகுதியில் வேப்பமரம் உள்ளது என்றால் சரியல்ல.

மேற்கு பக்கம் நாடாச்சி தங்கத்திற்கு பாத்தியப்பட்ட பகுதியில் நான்கு தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரியல்ல இரண்டு தென்னை மரங்கள் தான் உள்ளது ஒரு தென்னை மரத்தை பிரதிவாதிகள் வெட்டிவிட்டார்கள். ஆறு பூவரசம் மரம் நிற்கிறது என்றால் சரிதான். வேறு என்ன மரங்கள் நிற்கிறது என்றால் எனக்கு தெரியாது. ஆறு தென்னங்கன்றுகள் உள்ளது என்றால் சரிதான். ஒரு வேம்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி பகுதியில் என்னென்ன மரங்கள் நிற்கிறது என்ற விபரம் எனக்கு தெரியாது, எனது கையில் சொத்து கைவசம் இருக்கிறது என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல.

ராமுநாடாச்சி காணாமல் போனதற்கும் நேசபாண்டிய நாடாச்சி பெயரில் உள்ள சொத்தை கிரயம் எழுதுவதற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். நேசபாண்டிய நாடாச்சி அவர் பெயரில் உள்ள சொத்தை 1ம் வாதி கோவிலுக்கு எழுதி தருவதற்கு காலஅவகாசம் கேட்டதாக குறிப்பிட்டுள்ளேன் அதற்கான ஆவணங்கள் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. நான் காலஅவகாசம் கேட்டதாக குறிப்பிட்டுள்ளதை காட்டுவதற்கான ஆவணங்கள் யாரிடம் இருந்தும் வாங்கவில்லை என்றால் சரிதான். நோசபாண்டிய நாடாச்சிக்கு மனநிலை பாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் அதற்கான ஆவணங்கள் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. நோசபாண்டிய நாடாச்சிக்கு மனநிலை பாதிக்கப்பட்டதாக நேசபாண்டிய நாடாச்சியை அவதூறு செய்வதாக உள்ளது என்றால் சரியல்ல.

நேசபாண்டியநாடாச்சிக்கு மனநிலை பாதிக்கப்பட்டதாக கூறுவது அவதூறு செய்வதாக இருப்பதால் பிரதிவாதிகள் என் மீது நடவடிக்கை எடுத்துவிடுவார்கள் என்றால் சரியல்ல. எனக்கு முன்பாக இருந்த அதிகாரிகள் நேசபாண்டிய நாடாச்சியின் கணவரிடம் சொத்தை எழுதி தர வேண்டி கேட்டதாக குறிப்பிட்டுள்ளேன் அதற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நேசபாண்டிய நாடாச்சியின் கணவருக்கு எதிராக ஏதேனும் சட்டப்படியான நடவடிக்கை சொத்தை வாங்குவதற்காக எடுத்தேனா என்றால் இல்லை. நேசபாண்டிய நாடாச்சிக்கும் அவரது கணவருக்கும் விவாகரத்து ஆன விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நேசபாண்டிய நாடாச்சியின் கணவர் பெயர் என்ன என்றால் செல்லத்துரை. நேசபாண்டிய நாடாச்சியின் கணவர் செல்லத்துரையின் ஊர் என்ன என்றால் வைத்தியநாதபுரம். நேசபாண்டிய நாடாச்சிக்கும் அவரது கணவருக்கு பிள்ளைகள்

இல்லை என்றால் சரிதான். நேசபாண்டிய நாடாச்சியின் கணவரி மற்றும் அவரது குடும்பத்தினர் இந்து மதத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான்.

நேசபாண்டிய நாடாச்சி 07.12.2015 அன்று காலஞ்சென்று விட்டார் என்றால் சரிதான். நேசபாண்டிய நாடாச்சி உயிருடன் இருக்கும் சமயமே அவரது கணவர் செல்லத்துரைக்கு இரண்டாவது திருமணம் ஆகி நான்கு குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான். மூத்தபிள்ளையின் பெயர் சபீனா என்றால் சரிதான். மூத்தபிள்ளையின் சபீனாவிற்கு 2025 ல் 45 வயது என்றால் சரிதான். செல்லத்துரையின் மகனான மகேஷ் என்பவருக்கும் 2025 ல் வயது 45 என்றால் சரிதான். செல்லத்துரையில் இரண்டாவது மனைவி பெயர் செந்தமிழ்செல்வி என்றால் சரிதான். மற்றொரு மகனின் பெயர் ஜூலியஸ் என்றால் சரிதான். நேசபாண்டிய நாடாச்சி குழந்தைகள் இல்லாமல் இறந்து போனார்கள் என்றால் சரிதான். இந்து வாரிசுரிமை சட்டத்தின் படி தகப்பனாரிடம் இருந்து சொத்துக்கள் கிடைக்கப்பெற்றால் பெண்மணிகள் குழந்தைகள் இல்லாமல் இறந்து விட்டால் மறுபடியும் சொத்து யாரிடம் இருந்ததோ அவர்களுக்கே சென்று விடும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

வழக்கு பட்டிகை சொதது நேசபாண்டிய நாடாச்சி தகப்பனார் பொன்னுசாமி நாடாருக்கு பாத்தியப்பட்டு அவரிடம் இ,ருந்து 1974 ம் ஆண்டு பாகபத்திர எண். 2915/1974 ன் படி நேசபாண்யடிய நாடாச்சிக்கு கிடைத்ததால் நேசபாண்டிய நாடாச்சியின் தகப்பனாரானா மற்றொரு வாரிசுகளாக இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியின் மனைவி மற்றும் பிரதிவாதிகளின் தாயாருமான நாடாச்சி தங்கம் என்பவருக்கு முழு சொத்தும் கிடைத்து நாடாச்சி தங்கமும் இறந்து விட்டதால் தற்போது மீதமுள்ள பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு கிடைத்து

கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்பதால் வழக்கு பட்டிகை சொத்தில் செல்லத்துரைக்கோ இரண்டாவது மனைவிக்கோ அவர் மூலம் பிறந்த பிள்ளைகளுக்கோ எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படி செல்லத்துரைக்கோ இரண்டாவது மனைவிக்கோ அவர் மூலம் பிறந்த பிள்ளைகளுக்கோ எவ்வித உரிமையும் கிடையாது என்பதால் நான் பிரமாண வாக்குமூலத்தில் நேசபாண்டிய நாடாச்சி கணவர் விற்றதாகவும் விற்பனை தொகை பெற்றுக் கொண்டதாகவும் சொல்லி நீங்கள் சொத்தை கைவசம் சொத்தை வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்வதற்கு அவருக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

நேசபாண்டிய நாடாச்சி காலஞ்சென்ற பின்பும் மேற்படி சொத்தை மீட்பதற்கு எந்த நடவடிக்கையும் 1ம் வாதிகள் எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 என்னால் உருவாக்கப்பட்டதால் எனக்கு எந்த சொத்தையும் எழுதி வாங்குவதற்கோ சட்டப்படியான சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதற்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் 07.12.2015 அன்று வாரிசுகள் யாரும் இல்லாமல் நேசபாண்டிய நாடாச்சி கலஞ்சென்று விட்டதாக குறிப்பிட்டுள்ளது தவறு பிரதிவாதிகள் தான் அவரின் வாரிசுகள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ன் படி 2011ம் வருடம் 3 சென்ட் வாங்கினோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ன் படி 6 ஆயிரம் அன்றே வாங்கியிருந்தால் பி.வா.சா.ஆ.3 ன் படி நேசபாண்டிய நாடாச்சியின் சொத்தில் இருந்து 3 சென்ட் எழுதி வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. ஆகையால் நான் இவ்வழக்கை பொய்யான ஆவணங்கள் தயார் செய்து, பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நேசபாண்டிய நாடாச்ச்சியின் வாரிசுகள் இதுநாள் வரை தெரியாது என்று நான்

கூறுவது பொய் என்றால் சரியல்ல. 1981ல் இருந்து வழக்கு பட்டிகை சொத்து 1ம் வாதி கோவிலில் தடையற்ற முழுமையான கைவசம் இருக்கிறது என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் பட்டா மற்றும் மற்ற ரசீதுகள் பிரதிவாதியின் பெயரில் இருக்கிறது என்றால் சரியல்ல. பி.வ.சா.ஆ.3 ன் படி வாங்கிய 3 சென்ட்டை தவிர மீதமுள்ள சொத்திற்கு பிரதிவாதியின் பெயரில் பட்டா மற்றும் ரசீதுகள் கொடுத்துள்ளார்கள் என்றால் 12¼ சென்றுக்கு கொடுத்துள்ளார்கள். நேசபாண்டிய நாடாச்சிக்கு பாத்தியப்பட்ட 12¼ சென்றுக்கு உள்ள பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் நேசபாண்டிய நாடாச்சியின் தாயார் ராமு நாடாச்சி பெயரில் உள்ளது. ராமுநாடாச்சி பெயரில் இருந்தால் கூடா அவர் காலஞ்சென்று விட்டதால் பிரதிவாதிகள் பெயருக்க வரக்கூடியது என்றால் சரியல்ல. 51 சென்ட்டில் தெற்கு உள்ள 24½ சென்ட்டில் கிழக்கு 12 ¼ சென்டில் 3 சென்ட்டிற்கு மட்டும் தான் 1ம் வாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் 51 சென்ட்டில் தெற்கு உள்ள 24½ சென்ட்டில் நாடாச்சி தங்கத்திற்கு பாத்தியப்பட்ட மேற்கு பக்கம் உள்ள 3 சென்ட்டிற்கு பட்டா உள்ளது.

நாடாச்சி தங்கத்திற்கு பாத்தியப்பட்ட மேற்கு பக்க சொத்தில் இருந்து சொத்துக்கள் வாங்கியதாக காட்டுவதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இருக்கிறது எல்கை தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. நாடாச்சி தங்கத்திற்கு பாத்தியப்பட்ட மேற்கு பக்க சொத்தில் இருந்து சொத்துக்கள் வாங்கியதாக காட்டுவதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. நேசபாண்டிய நாடாச்சிக்கு பாத்தியப்பட்ட 12¼ சென்றில் நேசபாண்டிய நாடாச்சியை தவிர வேறு யாருக்கும் விலைக்கு கொடுக்க உரிமை இல்லை என்றால் சரிதான். நேசபாண்டிய நாடாச்சிக்கு பாத்தியப்பட்ட 12¼ சென்றுக்கு

நேசபாண்டிய நாடாச்சியை தவிர வேறு யாராலும் விலைக்கு வாங்கியிருந்தால் அது செல்லாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ன் படி 3 சென்ட் நாடாச்சி தங்கத்திடம் இருந்து வாங்கி நேசபாண்டிய நாடாச்சி சொத்தை கைவசம் வைத்திருப்பது தவறு என்றால் சரிதான் தவறுதலாக எல்கை குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் வாதி கோவிலுக்கு முன்னால் 6 சென்ட் வாங்கி அதில் கலையரங்கம் கட்டியுள்ளோம் என்றால் சரிதான். ஊரில் நடைபெறும் அனைத்து கலைநிகழ்ச்சி மற்றும் விழாக்களும் கலையரங்கத்தில் வைத்து நடைபெறும் விளையாட்டு போட்டிகள் கலையரங்கத்திற்கு முன்னால் வைத்து நடைபெறும் என்றால் சரிதான். விளையாட்டு போட்டிகள் வழக்கு பட்டிகை சொத்தில் வைத்து நடைபெறுவதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல.

2023 ம் ஆண்டு பொங்கல் விளையாட்டுகள் நடைபெறும் சமயத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்து நடத்தவிடாமல் செய்தது குறித்து காவல்நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. அவ்வாறு சம்பவம் நடந்ததாக காட்டுவதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. வாதி கோவிலுக்கு நஷ்டம் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் அதற்கான ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தை போலியாக ஆவணங்கள் தயார் செய்து விற்பனை செய்ததாக காட்டுவதற்கு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் சொத்து என் கைவசம் இல்லாததால் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க நாங்கள் தகுதியில்லாதவர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எதிருரையில் பத்தி 4 ல் ஐயாவழிபடி சிலை வழிபாடு கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் ஆஞ்சநேயரை வழிபடுவது தவறு என்று எதிர்உரையில் குறிப்பிட்டுள்ளேன் அது தவறு என்றால் சரிதான். எனது வழக்குரைக்கும் பிரமாண வாக்குமூல்த்திற்கும் நிறைய முரண்பாடுகள் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி 06.2.2023 அன்று அத்துமீறி சென்று அதிகாலையில் ஆஞ்சநேயர் சிலையை வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஊர்மக்களுக்கு ஆதாரம் இருப்பதாக கூறி தவறாக பரப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி கோவில் சொத்தினை அனுபவிப்பதற்கான அனுபவ சான்றிதழ் எதுவும் வழங்க முடியாது என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் பாரா 17ல் வா.சா.ஆ.3 பற்றி எனக்கோ தற்போதைய நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கோ எதுவும் தெரியாது என்று குறிப்பிட்டுள்ளேன் வா.சா.ஆ.3 ஐ தாக்கல் செய்து அதன்படி பரிகாரம் கோருவது தவறு என்றால் சரியல்ல. நேசபாண்டிய நாடாச்சி மற்றும் நாடாச்சி தங்கத்திடம் இருக்கும் சொத்தில் இருக்கும் தென்னை மரத்தில் பிரதிவாதிகள் தேங்காய் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொ'தினை குறித்து தென்னை மரங்களை சேதப்படுத்தியதாக ஒரு வழக்கு உண்டு என்றால் சரிதான். மேற்படி வழக்கு சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக கொடுக்கப்பட்ட வழக்கு என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் காவல்நிலையம் சென்று யார் சேதப்படுத்தினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியவில்லை என்று கூறினேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து எங்கள் கைவசம் இல்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.12, 13 நீதிமன்றத்தில் இருந்து எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 12,

13 சம்மந்தமாக இன்னொரு வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட விபரம் யார் சொல்லி தெரியும் என்றால் நேசபாண்டிய நாடாச்சி கணவர் சொல்லி தெரியும். வா.சா.ஆ.12, 13 சம்மந்தமாக பிரதிவாதிகளுக்கும் நேசபாண்டிய நாடாச்சி கணவருக்கும் RDO யிடம் நடந்த வழக்கு குறித்து தெரியுமா என்றால் நேசபாண்டிய நாடாச்சி கணவர் சொல்லி தெரியும். நேசபாண்டிய நாடாச்சி கணவர் இரண்டாவது திருமணம் செய்து அவரது வாரிசுகளுடன் தற்போதும் தொடர்பில் தான் இருக்கிறோம் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் உரிமைக்காக உரிமையே இல்லாத நேசபாண்டிய நாடாச்சி கணவர் இரண்டாவது திருமணம் செய்து அவரது வாரிசுகளை தூண்டி விட்டு அவர்களுக்காக நான் தான் இந்த வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல. ஆகையால் வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் சேர்த்து தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**